**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி.</u>**

**முன்னிலை:– திருமதி R.D. குருலட்சுமி,** M.A.,M.L., PGDI & CL.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருத்தணி.

திருவள்ளுவராண்டு 2055 குரோதி வருடம் ஆவணித் திங்கள் 27–ம் நாள்

2024 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 12 ஆம் நாள் வியாழக் கிழமை

இடைநிலை மனு எண்.3/2024

இன்

அசல் வழக்கு எண்.7/2024

(CNR.No.TNTR21-000007-2024)

...

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகரம் மற்றும் வட்டம், குமரகுப்பம் கிராமத்தில் வசிக்கும் லேட். நரசமந்தடி மனைவி சுமார் 81 வயதுள்ள லட்சுமியம்மாள்

... மனுதாரர்/வாதி

/எதிர்/

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், பொன்பாடி கிராமம் மற்றும் அஞ்சல், மேட்டுத் தெரு, கதவு எண்.1/3 ல் வசிக்கும் முனுசாமி நாயுடு மகன் சுமார் 60 வயதுள்ள கிருஷ்ணமூர்த்தி

... எதிர்மனுதாரர்/1 ம் பிரதிவாதி

(இ.ம.எண்.4/2024 ல் 24.07.2024 தேதியிட்ட உத்தரவின்பேரில் சீர்திருத்தம் செய்யப்பட்டது)

இவ்வழக்கு முடியும்வரை மனுச் சொத்தில் மனுதாரரின் அமைதியான அனுபவத்தினை, எதிர்மனுதாரரோ/ 1 ம் பிரதிவாதியோ அவரது வகையாட்களோ எவ்வித இடைஞ்சலும் செய்யக் கூடாது என இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி மனுதாரரால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 39 விதி 1, 2–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள நாள்:20.02.2024

இம்மனுவிற்கு நீதிமன்றக் கட்டணமாக ரூ.20/–செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு கடந்த 03.09.2024 ஆம் தேதி என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திருவாளர்கள் R. ராஜேஷ்வரபாபு, M. பாஸ்கர் ஆகியோர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/1 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் G. ஆபிரகாம், G. மோகன்ராம், ஆகியோர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், இருதரப்பு வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், இந்நாள் வரை நிலுவையில் இருந்த இம்மனுவில் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## உத்தரவாணை

1. மனு சொத்தை அசல் வழக்கு முடியும்வரை தற்போதுள்ள அதே நிலையில் அப்படியே (Status–quo) வைத்திருக்க உத்தரவாணை பிறப்பிக்கப்படுகிறது.
2. அவரவர் செலவுத் தொகையை அவரவர்களே ஏற்றுக் கொள்ள வேண்டுமென உத்தரவாணை பிறப்பிக்கப்படுகிறது.

## சொத்து விவரப் பட்டியல்

In Tiruvallur District, Tiruttani Taluk, Tiruttani Sub Division. No.21, Tiruttani village accounts Dry S.No.24/1D2, New S.No.24/1D1A6, Subramainya Nagar Plot No.2.

Bounded on the East by Daranivaragapurm Sivalingam house, West by 25 feet Road, North by Plot No.3, South by Plot No.1 and One Rohinikumar purchased 80 Sq.feet within these boundaries East to West Northern side 60 Feet, East to West Southern side 68 1/2 feet, North to South Western side 46 feet and North to South Eastern side 8 feet, totally 1540 Sq.feet at present vacant plot.

## செலவுத் தொகைப் பட்டியல்

இருதரப்பிலும் செலவுத் தொகைப்பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை.

2024 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 12 ஆம் நாள் என் கையழுத்திடப்பட்டு, இந்நீதிமன்ற இலட்சினைப் பதிப்பிக்கப்பட்டது.

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2024.09.23 17:39:32 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருத்தணி.